**செய்தி வெளியீடு எண்:544** **நாள் : 30.10.2015**

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், திரைப்பட நடிகர் திரு. A.விவேக் அவர்களின் மகன் செல்வன் பிரசன்ன குமாரின் மறைவையடுத்து, திரு. A.விவேக் அவர்களுக்கு 30.10.2015 நாளிட்டு அனுப்பிய இரங்கல் கடிதத்தின் விவரம் பின்வருமாறு:-

"தங்களின் அன்பு மகன் செல்வன் பிரசன்ன குமார் 29.10.2015 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மனவேதனையும் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தினால் ஈடுசெய்ய முடியாத இழப்பு தங்களுக்கு ஏற்பட்டுள்ள போதிலும், இந்தத் துயரத்தை தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியையும், தைரியத்தையும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் அளிக்க வேண்டும் என்றும், செல்வன் பிரசன்ன குமாரின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

செல்வன் பிரசன்ன குமாரை இழந்து வாடும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.

நாள்: 30.10.2015